**<u>சுருக்கம்</u>**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் – மாத தவணைக்கான அபராத வட்டி, வட்டி முதலாக்கத்திற்கான வட்டி, நிலத்திற்கான இறுதி விலை வித்தியாசத்திற்கான சலுகை ஆகிய சலுகைகளை விற்பனைப்பத்திரம் பெறாத ஒதுக்கீடுதாரர்களுக்கு அளிக்க தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பரிந்துரைகளை ஏற்று ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (நிஎ4–1) துறை**

அரசாணை (நிலை) எண்.215 நாள்: 28.09.2012.

<u>படிக்கப்பட்டன:</u>

1. அரசாணை (நிலை) எண். 37, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 14.02.2011.
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், கடித எண்.ஒதுக்கீடு (ஒருங்கிணைப்பு), நாள் 01.07.2011.

---------

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பல்வேறு நிகழ்வுகளில், வெவ்வேறு திட்டங்களில், நீண்ட காலமாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனைப்பத்திரம் வழங்கப்படாமல் இருந்த ஒதுக்கீடுதாரர்களின் கோரிக்கையினை பரிசீலனை செய்து உயர்மட்டக்குழு அளித்த பரிந்துரைகளையும், அதன் மீது தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் செய்த பரிந்துரை தீர்மானங்களையும் அரசு ஆய்வு செய்து கீழ்க்கண்ட சலுகைகளை அளித்து ஆணையிட்டது. இச்சலுகைகளை ஒதுக்கீடுதாரர்கள் நான்கு மாத காலத்திற்குள் பயன்படுத்திக் கொள்ள அனுமதியளிக்கப்பட்டது.

1) மாதத்தவணைக்கான அபராத வட்டி முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டது.
2) வட்டி முதலாக்கத்தின் மீதான வட்டி முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டது.
3) நிலத்திற்கான இறுதி விலை வித்தியாச தொகையில் ஒவ்வொரு ஆண்டிற்கும் 5 மாத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது.
4) அரசு ஊழியர்களுக்கு அரசாணை (நிலை) எண்.174, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 07.02.1991–ன்படி வட்டி சலுகை அளிக்கப்பட்டது.
5) தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கான ஒதுக்கீடுகளுக்கு விலையில் தற்போது நடைமுறையில் உள்ள 10% முன்வைப்புத் தொகைக்கு மட்டும் வட்டி வசூலிக்க ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் மேற்கூறிய ஆணையின்படி அனைத்து ஒதுக்கீடுதாரர்களும் நிலுவைத் தொகைகளை செலுத்தி தங்களது சொத்துக்களுக்கான (வீடு/மனை) விற்பனை ஆவணங்களை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடமிருந்து

பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், இந்த அரசாணையின்படி எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு ஒதுக்கீட்டாளர்கள் பயன்பெறவில்லை. எனவே, தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர், எஞ்சியுள்ள ஒதுக்கீடுதாரர்களும் பயனடையும் வகையில் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வழங்கப்பட்ட சலுகைகளை நீட்டிக்க, 14.07.2011–ஆம் நாளிட்ட வாரிய கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி உரிய கருத்துருவினை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்கள் பரிந்துரை செய்துள்ள கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு அரசாணை (நிலை) எண்.174, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 07.02.1991–ல் வழங்கப்பட்டுள்ள பலன்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கான ஒதுக்கீடுகளுக்கு விலையில் தற்போது நடைமுறையில் உள்ள 10% முன்வைப்புத் தொகைக்கு வட்டி வசூலிப்பு என்ற பலன்களுடன் கூடுதலாக:-

(i) மாதாந்திர தவணைக்கடன் செலுத்தத் தவறியதற்கான அபராத வட்டி

(ii) வட்டி முதலாக்கத்தின் மீதான வட்டி

(iii) நிலத்தின் இறுதி மதிப்பீடு வேறுபாட்டின் பேரிலான வட்டியில் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஐந்து மாத வட்டி, ஆகியனவற்றை தள்ளுபடி செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலும், ஒதுக்கீடுதாரர்கள் தாம் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை இவ்வாணை வெளியிட்ட நாளிலிருந்து ஆறு மாதகாலத்திற்குள் ஒரே தவணையாகவோ அல்லது நிலுவையிலுள்ள அசல் தொகைக்கு நடைமுறையிலுள்ள தனிவட்டியுடன் மூன்று தவணைகளில் தொகை செலுத்துவதற்கு விருப்புரிமை அளிக்கப்படுகிறது.

5. இந்நிவாரணச் சலுகையினை ஒதுக்கீடுதாரர்கள் பயன்படுத்திக் கொள்ளவும், ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து நிலுவைத் தொகை வசூலிப்பதை உறுதி செய்வதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.பணீந்திர ரெட்டி,**
**அரசுச் செயலாளர்.**

<u>பெறுநர்</u>
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை–35.
தனிச் செயலாளர், முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.
தனிச் செயலாளர், தலைமைச் செயலாளரின் அலுவலகம், சென்னை–9.
அரசு செயலாளரின் தனிச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நிதி(வீட்டுவசதி)த்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
பொது(கமுக்கம்)த்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.

**நகல்:**

இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பொ. ஜெயந்தி 28/9/2012

பிரிவு அலுவலர்.

செ 28.9.12